**O.S.No.93/2018**

**PW1 :** சம்பூரணம் தேதி 19.11.2025

வா.சா.1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

24.03.1941 , 12.02.1963 ஆகிய தேதிகளிட்ட என் அப்பா வாங்கியதாக சொல்லப்படும் கிரய பத்திரங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வெள்ளார்பாளையம் அத்தப்பக்கவுண்டர் மகன் முத்துகவுண்டர் என் தகப்பனார் தான். ஒரு சடையப்ப கவுண்டருடைய மகன் நல்லப்பகவுண்டருடன் சேர்ந்து என் அப்பா கிரயம் வாங்கியிருக்கிறாரா என்றால் சரிதான். என் அப்பா கிரயம் வாங்கிய கிரய பத்திரம் பி.வா.சா.ஆ.2. என்னிடம் காட்டப்படும் பத்திரத்தில் உள்ள முத்துகவுண்டன் மகன் சென்னியப்ப கவுண்டரிடமிருந்து என் அப்பா கிரயம் பெற்ற கிரய பத்திரம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.3. மேற்படி இரண்டு கிரய பத்திரங்கள் மூலம் என் அப்பா 8 ஏக்கர் 85-1/2 செண்ட் கிரயம் வாங்கியிருக்கிறாரா என்றால் சரிதான். இது போக என் அப்பாவிற்கு பூர்வீகத்தில் 2 ஏக்கர் 68 செண்ட் பாத்தியம் என்றால் சரிதான். என் அப்பா முத்துகவுண்டரும், என் சகோதரர் விஸ்வநாதனும், பூர்வீக சொத்தை பொறுத்து வாய்மொழியாக பிரிவினை செய்து கொண்டதில் என் அப்பாவிற்கு 1 ஏக்கர் 34 சென்டும், என்னுடைய சகோதருக்கு 1 ஏக்கர் 34 சென்டும் பிரிவினை ஆனது என்றால் அது எனக்கு தெரியாது. என் அப்பா கிரயம் வாங்கிய சொத்துக்கள் மற்றும் பாகப்பிரிவினையில் வந்த சொத்துக்கள் மொத்தம் 10 ஏக்கர் 19 சென்டை 01.02.1982ம் தேதியில் ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் என் அப்பா உயிருடன் இருக்கும் வரை உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை. என்னுடைய சகோதரர் விஸ்வநாதன் குடும்பத்துடன் இல்லாமல் அவர் மனம் போல் தனியாக வாழ்ந்து வந்தார் என்றால் சரியல்ல. அதனால் விஸ்வநாதனின் மனைவி குழந்தைகளை அழைத்து கொண்டு அவருடைய பெற்றோர் வீட்டிற்கு சென்று விட்டார் என்றால் சரியல்ல. என் அப்பா எழுதி வைத்த உயில்சாசனத்தின்படி 1ம் பிரதிவாதி சுந்தரமூர்த்தி ஈரோடு சார்பு நீதிமன்றத்தில் அ.,வ.எண்.282/1987 வழக்கு தாக்கல் செய்து அதில் என் அப்பா முத்துகவுண்டரின் சொத்துக்கள் அவருக்கு பாத்தியப்பட்டது என்று மேற்படி வழக்கு அவருக்கு ஆதரவாக தீர்ப்பானது என்றால் சரியல்ல. அந்த வழக்கில் உயில் சாசனத்தின் சாட்சிகள் மற்றும் எழுத்தர் ஆகியோர் விசாரிக்கப்பட்டு முழு

விசாரணைக்கு பின்னிட்டு தீர்ப்பானது என்று சொன்னால் சரியல்ல. என் தம்பி விஸ்வநாதனுக்கு பிரிந்த 1 ஏக்கர் 34 சென்டில் 67 செண்டை பிரித்து கொடுக்கும்படி 1ம் பிரதிவாதிக்கு மேற்படி வழக்கில் பரிகாரம் கேட்டு தீர்ப்பனாது என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு விஸ்வநாதனுக்கு 67 செண்டும், சுந்தரமூர்த்திக்கு 67 சென்ட்டும் பிரிவினை ஆகி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது, ஒன்றாக தான் ஓட்டி வந்தார்கள். உயில்படி பாத்தியப்பட்ட சொத்துக்களை ஜப்தி செய்யப்பட்டது செல்லாது என்றும், ஏலத்திற்கு கொண்டு வர கூடாது என்றும் 1ம் பிரதிவாதி சுந்தரமூர்த்தி அ.வ.எண்.510/1987 வழக்கை தாக்கல் செய்து, தீர்ப்பான விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. அந்த வழக்கின் தீர்ப்பின் பேரில் அரசாங்கம் மாவட்ட நீதிமன்றத்திலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யப்பட்டு அந்த மேல்முறையீட்டு வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி சுந்தரமூர்த்திக்கு தான் சொத்துக்கள் பாத்தியம் என்று தீர்ப்பான விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, மேல்முறையீடு எதுவும் செய்யப்படவில்லை. மேற்படி விபரங்கள் தெரிந்தே சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்று தெரிந்தே வாதிகளாகிய நாங்கள் அனைவரும் சேர்ந்து பி.வா.சா.ஆ.1 பிரமாண பத்திரிக்கை எழுதி கொடுத்தோம் என்றால் சரியல்ல. எந்த பத்திரத்திலும் நாங்கள் கையெழுத்து போடவில்லை. எங்களுக்கு தெரியாமல் சுந்தரமூர்த்தி பட்டா பெயர் மாற்றம் செய்து கொண்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றும், எங்கள் சம்மதத்தின்பேரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் வீஸ்வநாதனுக்கு பிரிவினை ஆன 67 சென்டில் தான் 5ம் வாதி ஜோதிகாயத்ரிக்கு மட்டும் தான் பாத்தியம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 4 வாதிகளாகிய எங்களுக்கு தாவா சொத்தில் எவ்வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 கிரய பத்திரத்தின்படி என் அப்பா வாங்கிய சொத்துக்கள் வீட்டு வசதி வாரியத்திற்காக அரசங்காத்தால் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த பூமி உள்ளதா என்றால் ஆம், உள்ளது. பி.வா.சா.ஆ.3 சொத்துக்களை நாளது வரை அனுபவித்து வருகிறீர்களா என்றால் ஆமாம் அனுபவித்து வருகிறோம். அந்த பூமி அரசாங்கம் வீட்டுவசதிக்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டு பல்வேறு நபர்களால் வீடு கட்டப்பட்டு உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.3ல் கண்டுள்ள சொத்துக்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். உயில்படி அந்த சொத்து 1ம் பிரதிவாதி சுந்தரமூர்த்திக்கு பாத்தியம் என்றும், ஆர்ஜிதம் செய்த பிறகு

அதற்கான இழப்பீட்டு தொகையை 1 ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டார் என்பது எங்களுக்கு தெரியும் என்றும், மேற்படி விபரம் தெரிந்தே பி.வா.சா.ஆ.3 சொத்துக்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சுந்தரமூர்த்தி தான் இழப்பீட்டு தொகை வாங்கினார், அது எங்களுக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே சுந்தரமூர்த்தி இழப்பீடு தொகை வாங்கினார் என்றால் சரிதான். அதை நாங்கள் வழக்கில் சொல்லவில்லை அப்போதே எங்களுக்கு தெரியவில்லை. வழக்கு சொத்தின் ஒரு பகுதி 46 புதூர் பஸ் ஸ்டாண்டு அருகே உள்ளது என்றால் சரிதான். மேற்படி பஸ் ஸ்டாண்ட் அருகே உள்ள பூமிக்கு தடம் வேண்டும் என்று சுந்தரமூர்த்தி உத்தரவு பெற்றுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை நாங்கள் எக்காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றும், அதனால் தான் பி.வா.சா.ஆ.2, 3 கிரய வாங்கிய விபரத்தையோ, பி.வா.சா.ஆ.3 சொத்து அரசால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட விபரத்தையோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. முறையாக தான் 1 ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றும், அதை நாங்கள் ஆட்சேபணை செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு தெரியாமல் சுந்தரமூர்த்தி பட்டா பெயர் மாற்றம் செய்து கொண்டார். என் அப்பா முத்துகவுண்டர் அவருடைய தனிப்பட்ட வருமானத்தை கொண்டு பி.வா.சா.ஆ.2 , 3 சொத்துக்களை கிரயம் வாங்கினார் என்று சொன்னால் சரிதான். என் அப்பா எழுதி வைத்த உயில் எனக்கு தெரியும் என்றும், அதன்படி 1 ம் பிரதிவாதி அனுபவித்து வருகிறார் எனக்கு தெரியும் என்றும், தற்போது அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பின்படி 1 ம் பிரதிவாதிக்கே தாவா சொத்துக்கள் பாத்தியம் என்றும், நாங்கள் அனுபவத்தில் இல்லை என்றும், அதில் நாங்கள் பாத்தியம் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. முத்துகவுண்டர் உயிருடன் இருக்கும் போதே சர்வே எண்.535/2 ல் 27-1/4 சென்டை ஒரு ஆர்.சி.பழனியப்பன் என்பவருக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். பழனியப்பனுக்கு அவர் என்ன உறவுமுறை என்றால் அது எனக்கு தெரியாது. பழனியப்பன் என் அத்தையின் கணவர் என்றால் சரியல்ல. சுந்தரமூர்த்தியின் பெரியம்மா கணவர். அந்த 27-1/4 சென்டை பழனியப்பன் சுந்தரமூர்த்திக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. என் அப்பா பழனியப்பனுக்கு கிரயம் கொடுத்த விபரம் எனக்கு முன்பே தெரியும் என்று சொன்னால் சரியல்ல, தெரியாது. சொத்தை நாங்கள் அனுபவித்து வந்திருந்தால் மேற்படி விபரங்கள் எனக்கு தெரிந்திருக்கும் என்றும், அனுபவத்தில் இல்லாததால் தான் விபரங்கள் தெரியவில்லை என்றால் சரியல்ல. புதூர்

கிராமம் ரீ.சஎண்.535/9 ல் 26 சென்டை சுந்தரமூர்த்தி தன் மனைவி ஜெயந்திக்கு தானசெட்டில்மெண்ட் 15.02.2010 ல் எழுதி கொடுத்து இருக்கிறார் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தின் நகலை எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை, பார்க்கவில்லை. ஜெயந்தி பெயரில் உள்ள சொத்துக்களையோ, ஜெயந்தியையோ இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. சொத்துக்கள் ஏற்கனவே பிரிவினையாகி என் அப்பா 1 ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைத்துவிட்டதால் 1 முதல் 4 வாதிகளாகிய எங்களுக்கு சொத்துக்களில் பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல. விஸ்வநாதனுக்கு பிரிந்த 67 சென்டில் தான் 5 ம் வாதிக்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல. எல்லா விபரமும் தெரிந்தே பொய்யான வழக்கை தாக்கல் செய்து இருக்கிறேன் என்றால் சரியல்லை.